[1981 மார்ச் 26

திருவில்லிப்புத்தூர் தொகுதி திருவண்ணாமலையில் துளசித் தோட்டம்.

*வினா எண் 501—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி திருவண்ணாமலைக்கு அருகே சித்த வைத்தியத்திற்கு மூலப் பொருளான (துளசி) துளசித் தோட்டம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இல்லை.

[முற்பகல் 10-00].

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, திருவண்ணாமலையில் துளசித் தோட்டம் இல்லாவிட்டாலும் செண்பகத் தோப்பில் துளசித் தோட்டம் ஆரம்பிப்பதாக உத்தேசிக்கப்பட்டது. ஆனால் அதற்காக 40 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டி இருக்கின்றது. அந்த இடத்தைக் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். ஆகவே அந்த இடத்தை உடனே ஆர்ஜிதம் செய்து துளசித் தோட்டம் வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினா விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் திருவில்லிப்புத்தூருக்கு அருகிலே உள்ள அருள்மிகு நாச்சியார் திருக்கோவிலுக்குச் சொந்தமான செண்பகத்தோப்பு என்னும் இடத்தில் ஏறத்தாழ 243.98 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் 63 000 ரூபாய்க்கு சின்னப்ப நாடார் என்பவருக்கு 1—11—80 அன்று குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. தற்போது நாம் அங்கே ஒரு மூலிகைப் பண்ணையை ஆரம்பிக்கலாம் என்ற திட்டத்தை தீட்டி அதற்கு அந்த நிலத்தை கேட்டு அணுகிய போது அந்த நிலம், நான் மேற்கூறியவாறு, குத்தகைக்கு விடப்பட்டதை தெரிவித்தார்கள். ஆகவே இது சம்பந்தமாக நானும் உடனடியாக மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை அணுகி கேட்டேன். அந்த குத்தகையை தளர்த்தி, 1 ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஆக்கி அல்லது அதை ரிலீஸ் செய்து அந்த 40 ஏக்கர் நிலத்தை மருத்துவத் துறைக்கு

[981 மார்ச் 26]

கொடுப்பது பற்றி முயற்சி செய்து பார்க்கலாம் என்று அற நிலையத்துறை அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த மூலிகைப் பண்ணையை அந்த இடத்தில் ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி, அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் நானும் எடுத்து வருகிறேன் என்ற இந்தச் செய்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு திருப்தி அளிக்கும் என்று கருதுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய நங்கை என்னும் வகைப்பட்ட துளசி நாட்டில் அழிந்துக் கொண்டே போகிறது. அந்த துளசியின் இலை பாம்புக் கடிக்குச் சிறந்த மருந்தாக இருக்கிறது. வயல் காட்டில் கிராமப் புறங்களில் வேலை செய்பவர்களை திடீரென்று பாம்பு கடித்து விட்டால், மருத்துவமனையும் வயற்காட்டிலிருந்து வெகு தொலைவில் இருக்குமானால், அவர்களை எடுத்துச் செல்வதற்குள் இறந்து விடுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சிறிய நங்கை என்னும் வகைப்பட்ட துளசியை கிராமப்புறங்களில் பயிர் செய்து தோட்டம் அமைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தமிழக அரசு மிகவும் அக்கறை கொண்டிருக்கிறது என்று கூறி, நல்ல வேளையாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாம்புக் கடியிலிருந்து தப்பியதற்காக இயற்கைக்கு நன்றி கூறுகிறேன்.

திருவண்ணாமலை—திருப்பதி பல்லவன் பேருந்துப்பணி.

* வினா எண் 502—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் இருந்து வேலூர், சித்தூர் வழியாக திருப்பதி சென்று வந்த பல்லவன் பேருந்து சமீப காலமாக நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன?

(இ) பேருந்தை மீண்டும் இயங்கச் செய்ய அரசு எடுத்து உள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) ஆந்திர மாநில நீதிமன்ற உத்தரவின் பேரில் இத் தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது.